மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 55 குடும்பங்களுக்கு கோட்டூர்புரத்தில் தீ பிடிக்காத வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Visit of World Bank Officials.

* 190 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the officials of the World Bank visited the Projects of Slum Clearance Board in December 1972; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) 1972-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் எட்டாம் தேதியன்று உலக வங்கியைச் சேர்ந்த திரு. ஜோஷென்கிராஸ்கே அவர்களும், திரு. பில்செல் எச். அலிஸ்பா அவர்களும் தங்களுடைய சென்னை சுற்றுப் பயணத்தின்பொழுது குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் திட்டப் பகுதிகளைப் பார்வையிட்டார்கள். வாரியத்தின் பணியை மிகவும் பாராட்டியுள்ளார்கள். அதற்குரிய சான்றுகளும் அளித்திருக்கிறார்கள்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, சிட்டி பகுதிகளைப் பார்வையிட்டு, சான்றுகள் வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிட்டியில் கட்டப்பட்டிருக்கும் வீடுகளைப் பார்வையிட்டுத்தான் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி மாவட்ட வாரியாக அந்தத் திட்டத்தை விரிவுபடுத்த ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம் சென்னையில் தான் பணியாற்றுகிறது. வீட்டு வசதி வாரியம் மாவட்ட அளவில் முடிந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் மூலம் குடிசைப் பகுதிகளை மாற்றி வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

Lands for Slum Clearance schemes.

* 191 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) the details of lands given free to the Slum Clearance Board ;

(b) the extent of land given ; and

(c) their value ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விகளுக்கு இடமில்லை.

Posts of Statistical Inspectors.

* 192 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) the total number of post-graduates at present working as Assistant Statistical Investigators in the department of Statistics;

(b) whether they are considered for promotion to higher posts, whenever vacancy arises;

(c) if so, the details thereof; and

(d) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) 23.

(இ) ஆம்.

(உ) புள்ளி விவர ஆய்வாளர் பதவித் தரத்தில் காலியிடம் எழுகின்ற போது, அப் பதவிக்குப் பதவி உயர்வு செய்யப்படுவதற்கு, செயலில் உள்ள விதிகளின் படி, மற்ற உதவிப் புள்ளி விவர ஆய்வாளர்களுடன் சேர்த்து பட்ட மேற்படிப்புப் பட்டதாரிகளும் கருதிப் பார்க்கப்படுகின்றனர்.

(எ) இவ்வினா எழவில்லை.

DR. H. V. HANDE: May I know, Sir, whether the Government is aware of the fact that there is a large-scale discontentment among the Statistical Inspectors because they do not have adequate promotional opportunities in that department in spite of the fact that they have been serving for quite some time?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அங்கேயுள்ள புள்ளி விவர ஆய்வாளர்கள் சில கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி செய்யப்படுகிற காரியங்கள் ஒரு வரையறைக்குட்பட்டு செய்யப்படுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எம். ஏ. போன்ற பட்டதாரிகளைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் இந்தப் பதவிக்கு 40 சதவீதம் நேரடித் தேர்வின் மூலமும். 60 சதவீதம் பதவி உயர்வு மூலமும் தரப்படுகிறது. பட்ட மேற்படிப்ப படித்திருக்கிறார்கள் என்பதற்காகத் தனிச் சலுகை கிடையாது. பட்டதாரியோடு சேர்ந்து தான் அவர்களுக்கும் பதவி உயர்வு தரப்படுகிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.